போஸ்டு-ரி. நெ. 819.

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௫. } விரோதிகிருது வஸ புரட்டாசிமீ { பகுதி ௬.

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| சுதேசாபிமானம்—பத்திராதிபர் | ௧௬௧ |
| சைவம் நாட்டிய தமிழ் மாது—ஐ. சாமிநாதமுதலியார் | ௧௬௩ |
| மலேரியா என்னும் விஷஜுரம்—சர்க்கார் பிரசுரம் | ௧௭௭ |
| நாட்டுகோட்டையாரும் கல்வியும்—இராமநாதன் | ௧௮௧ |
| கீர்த்தி பெற்றசில் கிரேக்கரும் ரோமரும் } ம. கோபால கிருஷ்ணையர் | ௧௮௫ |
| முத்ரா ராக்ஷஸம்—R. ஸேதுநாராயண சர்மா B. A. B. L. | ௧௮௮ |
| மாலினீ மாதவம்—R. S. நாராயண ஸ்வாமி ஐயர் B. A. B. L. | ௧௯௨ |
| சமாசாரக் கொத்து—பத்திராதிபர் | ௧௯௯ |


மு. ரா. கந்தசாமிக் கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபால கிருஷ்ணையர்.
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். } பத்திராதிபர்

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.
மாணாக்கர்கட்கு சந்தா ரூ 1. தபாற்கூலி வேறு. தனிப்பிரதி அணா 3.
மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது.

வித்தியாபாநு விளம்பரம்.

# இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரீஸ் கலர்களில்

அதாவது,

## ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

## ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகம்

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத் தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளை செய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பப்படு மென்பது திண்ணம்.

| | |
|---|---|
| 42 இஞ்சு அகலம்<br>8 கஜம் நீளம் | புடவை 1க்கு விலை<br>ரூ. 25 முதல் ரூ. 50 வரை. |
| 42 இஞ்சு அகலம்<br>20 இஞ்சு நீளம் | ரவிக்கை 1-க்கு விலை<br>ரூ. 2—8—0 முதல் ரூ. 5 வரை |

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம். எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம். (விலாசம்)

## கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி. *Benares City.*

உ

கடவுள் துணை.

# வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩.} விரோதிகிருது ௵ புரட்டாசி ௴ {பகுதி ௯

## சுதேசாபிமானம்.

"இல்லானுக் கன்பின் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும் அவற் கென் செயும்?—நல்லாய்!
மொழி இலார்க்கு ஏது முதுநூல்? தெரியும்
விழி இலார்க்கு ஏது விளக்கு?"—நன்னெறி.

"சுதேசாபிமானம்" என்னும் தொடர் மொழிக்குச் "சொந்த நாட்டின்மேல் அன்புகொண் டிருத்தல்" என்பது பொருளாகும். ஒருவர்க்குச் சொந்த நாடு அவரது பிறப்பிடமாகத்தான் இருக்க வேண்டு மென்பதில்லை. அவரது உற்பத்திக்குக் காரணராகிய அவரது தந்தை மூதாதையர்கள் பிறந்து வளர்ந்த தேசமுமாகும். இதனைப் பின்வரும் விஷயத்தால் அறியலாகும்: இந்தியாவிற் பிறந்த இங்கிலீஷ்காரரும் இங்கிலாந்தில் பிறந்த இந்தியரும், முறையே இந்தியாவையும், இங்கிலாந்தையும், தமது சுதேசமாகக் கருதிப் பாராட்டுவதில்லை, நிற்க.

சொந்த நாட்டின்மேல் அபிமானங் கொண்டிருத்தலாவது, அத்தேசத்திலுள்ள இயற்கைப் பொருள்களிடத்தும், தேசத்தாரிடத்தும், அது சம்பந்தமான பிறவற்றினிடத்தும் அபிமானங் கொள்ளலாகும். சுதேசாபிமானிக்குத் தன் ஊர் எவ்வளவு கேவலமானதாயினும், குறைகள் கொண்டிருப்பினும், அதுவே பூலோக கைலாசமாகத் தோன்றும். வேறு மனிதர்களுக்கு வெறுப்பை விளைவிக்கக் கூடிய விஷயங்கள் அவனுக்கு மிக்க விருப்பையே விளைவிக்கும். இதற்குப் பின்வரும் விஷயமே சான்றாகும்:— உலாந்து என்ற தேசம் கடல் மட்டத்திற்கு எவ்வளவோ தாழ்ந்து அதி அபாயகரமான நிலையில் நாளும் இருப்பினும், "காக்கைக்குத் தன குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல, அந்நாட்டிலும் சிறந்த நாடு ஒன்று உண்டென்று கருதவாவது, தன் நாட்டாரினும் சிறந்த ஜனங்கள் எங்கேனும் இருக்கிறார்கள் என்று எண்ணவாவது, ஓர் டச்சுக்காரனால் முடியாது. பிரதிதினமும், பூகம்பத்திற் குள்ளாகி கிடக்கும் ஜப்பானியனுடைய அபிமானத்தையும், பாருங்கள்! அதிகமாய்ச் சொல்வானேன்?

* "ஆடை யின்றி வாடையில் மெலிந்து<br>
கையது கொண்டு மெய்யது பொத்திக்<br>
காலது கொண்டு மேலே தழீஇப்<br>
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்"த்து

(ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்ற ஆங்கிலகவி சொல்லுகிறபடி)

† குளிரால் நடுங்கிக் கொண்டேயிருக்கும்<br>
சீதள பூமியிற் சேர்ந்துறை வோனும்,<br>
இவ்வுல கத்துள இடங்களி லெல்லாம்<br>
தன்உறை விடமே தான்சுக பூமி யென்று<br>
இம்பியும கூசாது எடுத்துரைக கின்றான்:<br>
கொந்தளிப் புடனே கூடிய தாகிய

* சத்தி முத்தப்புலவர்.

† The shuddering tenant.........revelry and ease<br>
§ The naked negro .. .. .....is ever at home } —*Traveller.*

தன்கடல் கொண்டுள மன்பெரு நிதியையும்,
கள்ளாட் டயர்வும் ¶கவல்களை நீக்கவும்
தனக்குள நீண்ட தனிஇராப் பேற்றையும்
குறித்துப் பெரிதும் கொண்டா டுகிறான்.
§ புனையுடை நீக்கிப் பூமத் தியரே
கைக்கரு காண்மையில கடுவெயில் பொருது
நெடுமூச் சுடனுறை நீகிரோ வனும்தன்
எழில்பொன் மணலையும் ஈச்சங் கள்ளையும்
பற்றிப் பெருமை பாராட் டுகிறான்:
காந்தும் வெயிலிற் காய்ந்தும் வெய்ய
திரையொடு பொருது திளைத்தும், தனக்கு
நல்கிய எல்லா நலகிமித் தமும் தன்
வழிபடு கடவுளை வாழ்த்துகின் றனனால்;
எங்கெங் கோராம் எய்திக் காணினும்
தேசாபி மானம் திகழ்ப்வர் புகழுரை
இத்தகைத் தாகவே இருக்கும். இன்னவர்க்கு
ஒருமுதல் நாடும் உத்தம பூமியும்
தாயக மாகும் தமதுறை விடமே. "

இத்தகைய அபிமானம் எவராலும் ஆக்கப்படுவதின்று. இயல்பாகவே எழும் ஒருவித மனக்கிளர்ச்சியேஇது. தமதுபிறப்பு, விளையாட்டு, வாழ்க்கை, சுகம், துக்கம், முதலியன நிகழ்ந்ததும தாம் இளமை முதல் நண்பர்களுடனும் உற்றார் உறவினருடனும் கூடிக் குதூகுலமாக் கழித்ததுமான இடமே ஒப்புயர்வில்லா உத்தமபூமி யென்று எவர்க்கும் படுவது இயல்புதானே? இதில் இரும்பூதெ ன்னே?

தம்நாட்டில் உள்ள சாமானியப் பொருள்களாகிய இள மரக்காவும், பயிர் பசசைகளும், பர்வதங்களும்,குளம் குட்டைகளும், அந்தரக் காட்சியும் வான ஜோதிகளும் இன்னோரன்ன பிறவும் கூட தேசாபிமானிகளுக்கு இன்பத்தையும் உற்சாகத்தையும் உண்டாககுவன ஆகும். எலிஸாகூக் என்ற ஆங்கிலமாது பாடிய " எனது

¶ கவல் = கவலை. களை = களைப்பு.

ஜன்ம பூமி" என்பதையும், ஸர் வால்டர் ஸ்காட் என்ற ஸ்காட்லண்ட் நாட்டுக் கவிஞர் பாடிய "Lay of the Last Minstrel" என்னும் செய்யுள் நூலில் உள்ள "காலிடோனியா"ப் புகழ்ச்சியையும் படித்தோர்க்குத் தெரியாமற்போகாது.

இது காறும் சொல்லியவற்றால் சுதேசாபிமானம் இன்னதென்பதுவும் ஜன்மபூமியினிடத்தில் அபிமானமுடையராயிருத்தல் மனிதர்க்குண்டான இயல்பான ஆசைகளில் ஒன்று என்பதும், ஒரு தேசத்தார் எவ்வளவு நாகரீக மற்றவர்களாயினும், தேசமே பிறர் எதிர்பார்க்கும் பயனைத் தராததாக இருப்பினும்அவரவர் தேசமே அவரவர்க்கு உயர்ந்ததாயிருக்கும் என்பதும் நன்கு தெரியவரும்.

ஓர் அபிமானி தன் நாட்டைப் பாராட்டிப் புகழ்வதற்குக் காரணம், அது " தன் நாடு " என்று அவன் கொண்ட எண்ணமே ஆகும் இதனினும் சிறந்த காரணம் யாதொன்றுமில்லை. வேறு இருக்கவும் முடியாது. உண்மையிலேயே தேச பக்தி தன்னயங் கருதாமல் எழுவதாகும்.

" கண்டார் இகழத்தன் காதலன் தான் வைகினும், அக்
கொண்டானை அல்லாற் குறியாக் குல மகள்போல்"

எவன் இருக்கிறானோ அவனே தேசாபிமானியாவன்.

ஈன்று வளர்த்த தாய் தந்தையிடத் தபிமானம் இல்லாதிருந்தாலும் இருக்கலாம். சுதேசத்தினிடம் அபிமானம் இல்லாமலிருக்க எவனாலும் முடியாது. அப்படி ஒருவன் இருக்க நேரிடின் அவனினும் பெரும் பாதகன் இல்லையென்றே துணிந்து சத்தியம் செய்துவிடலாம். ஏனெனில் இயற்கைக்குணத்தையே துறந்த இவன் அடாத-முறை கேடான தீச்செயல் ஏதும் செய்யப் பின் வாங்கான்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

---

கடவுள் துணை.

# *சைவம் நாட்டிய தமிழ்மாது.

## 1. முகவுரை.

"சைவ"மாவது சிவமே பரமெனத் தேறினமார்க்கம் ஆகும். "நாட்டுத"லாவது, நின்றநிலை தடுமாறித் தத்தளித்ததை உறுதிபெற நிறுத்தல். "தமிழ்மாது" என்னுந் தொடர்மொழி, பிறந்தகம் புகுந்தகம் இரண்டும் தமிழகமாக உடைய பெண்ணைக் குறிக்கும். இங்குச் சைவம் என்பது ஓர் பலன்தரு மரமென உருவகம் பெற்றது. அதைச் சில வேர்க்கறையான்கள் வெட்ட, அது நிலைகுலைந்தலைந்து வீழ்ந்தொழிய நின்றது. அம்மரத்தின் அருமை பெருமை முதலியவற்றை நன்குணர்ந்த ஓர் பெண்மணி, வெட்டின வேர்க்கறையானை வெந்நீர் வார்த்து ஒழித்து அம்மரத்தை யாரும் எக்காலத்தும் அசைக்காதிருக்கும் வண்ணம் நிலைபெற்று நிற்கச் செய்தனன். அவ் வேர்க் கறையான் யாவை? வெந்நீர் எது? என்பனவும் பிறவும் மேல்வருவனவற்றால் விளங்கும். நிற்க.

வியாசம் பல் வேறுபாடுடையது. அவ்வேறுபாடு அனைத்தும் †"தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு" என்னும் நான்கனுள் அடங்கும். அவற்றுள் ஈண்டு யாம் எழுதப்புகுவது "தொகைவிரி" யாகும். யாண்டுத் தொகுத்தோம், யாண்டு விரித்தோம் என்பது எமது நண்பர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

---

*இது மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தின் 10வது வருஷோத்ஸவ காலத்தில் வாசிக்கப் பெற்றது.

†தொகுத்தல்=பரந்துகிடக்கும் ஒன்றைச் சுருக்கிக் கூறுவது.

விரித்தல் =சுருங்கிக் கிடக்கும் ஒன்றை விரித்தெழுவது.

தொகைவிரி = தொகுக்க வேண்டுமிடத்துத் தொகுத்தும், விரிக்க வேண்டும் இடத்து விரித்தும் எழுதுவது.

மொழிபெயர்ப்பு = பிறமொழியில் உள்ள அரியபெரிய பொருளைத் தம் மொழியில் எழுதிச்சொல்வது.

# நூல்.

## II. திருமணம்.

கருவை, உறந்தை, மதுரை, என்னும் மூன்நகரையும் முன்னக ராக உடையது நமது தமிழகம் இவற்றில் சேரன், சோழன், பாண்டியன் என்னும் தமிழ் வேந்தர் மூவரும் முறைமையேயிருந்து ஆண்டு வந்தனர். ஒத்தாரும் உயர்ந்தாரும் இல்லாது அரசு செலுத்திய இவர்கள், தம்முள் ஒருவருக்கு ஒருவர் தாழ்ந்தவர் அல்லர் என்பது, ஒருவரை யொருவர் தாழ்வதும், தாழ்த்துவதுமாயிருந்து வந்த சரித்திர ஆராய்ச்சியால் அறியலாகும்.

யாம் எழுதப்புகும் இந்நாளில் பாண்டியன் ஒருவன் சேர சோழ ரிருவரையும் எதிர்த்துப்பொருது எளிது வென்றனன், அரசர்களுக்கு வெற்றி தோல்வி உடற்பிறப்பு, ஆதலின் என்க வென்றார் தோற்றாரிடம் வேண்டியன பெற்று விடை கொடுப்பதும் வழக்கம். ஈண்டு வென்ற பாண்டியன் கூன்பாண்டியன். இவன்முதுகு வளைந்தது மற்ற இருவர் தலைவணங்கவேயன்றி வேறன்று தோற்ற இருவரில் மலைநாட்டுக்கு அரசனாகிய சேரன் மலைபடு பொருளில் சில தந்துவருவதாக உடன்பட்டு விடைபெற்றுச் சென்றான். சோழன் நதிபடு திரவியம் பல கொடுப்பதாக இசைந்தும் †கன்னிநாட்டரசன் இசையாது, * பொன்னிநாட்டரசனது ¶ கன்னியின்மேல் தன் ‡ நாட்டமிருப்பதைக் குறிப்பா லுணர்த்தினன். இதை யறிந்து சோழன் வருந்தாது வருந்தினன். வருந்தவேண்டிய தென்னை யெனில், கன்னியர்கள் கணவன் கட்டழகனா யிருக்க விரும்புவார்கள் என்பது யாவரும் அறிந்ததொன்றே. ஈண்டுவிரும்பிய கணவன் கூனிக் குனிந்த உடல் கூன்பாண்டியன். குறித்தகன்னி பெண்ணிற்சிறந்த பெருமாட்டி என்பதை, இவளுக்கு அமைந்த "மங்கையர்க்கரசி" என்னும் பெயரே விளக்கும் "இவ்விருவருள் மனமகிழ்ச்சி எந்நனம் வாய்க்கும்?" என்று அரசன் எண்ணி எண்ணி மனம் கன்றி நின்றான். என்றாலும், இப்பெண்மணிக்கு மற்றொருபெயர் "மானி". ஆதலின் இவள் பொருளின் தராதரம் அறிந்து, தள்ளுவதைத் தள்ளிக் கொள்ளுவதைக் கொள்ள வல்ல "ஞானி" யென்றும் அவன் அறிவான்.

---

†கன்னிநாட்டரசன் = பாண்டியன், * பொன்னிநாட்டரசன் = சோழன்,
¶ கன்னி = மகள், ‡ நாட்டம் = திருஷ்டி.

ஆதலின், தனக்குற்றதை அவளிடம் உரைக்கலாயினன்: "ஹே கண்மணி! நான் சூரியகுலத் தரசன். என்னைச் சந்திரகுலத்தவனாகிய பாண்டியன் தன்னடிக்கீழாக்கினன். சந்திரன் சூரியனில் போய் ஒடுங்குவது சகஜம். சூரியன் சந்திரனில் ஒடுங்கும்படி இப்போது நேரிட்டிருக்கிறது. இதினின்றும் விலகக வழி ஒன்றேயுளது. உடற் கூனனாகிய இக்கூன்பாண்டியன், உடல் கோணியதுபோல மனமும் கோணியவனாய் "பெண்ணைக் கொடுத்து உன்னைவிடுத்துக்கொள்" என்று பிதற்றுகிறான். இவன் இன்னவனாயினும், இவன் குலம், குடிநலம், கோத்திரம் முதலியவற்றிற் சிறந்தோனே. தடாதகைப் பிராட்டியார் அவதாரம்செய்த குலமே இவன் குலம். அவளை மணம் புரியும்பொருட்டு சோமசுந்தரக்கடவுளே மருமகனாக வரப்பெற்ற குடியே இவன்குடி. இவ்விருவர்பால் உதித்த உக்கிரகுமாரனாக வந்த சுப்பிரமணிய கோத்திரமே இவன் கோத்திரம். அச்சோமசுந்தரக் கடவுளே விறகும் வளையும் சுமந்து வீதிதோறும் அலைந்துள்ள மதுரைப்பதியே இவன் தலைநகர். இத்தகையனாயினும் இந்தக்கூனனுக்கு உன்னைக்கொடுக்கவோ மனம் இல்லை. யானிவனுக்கு அடிமையாக அடுக்கவும் துணிவில்லை ஆதலின் 'இரண்டுகெட்டானுக்கிரங்குமோர் ஆவென' இருக்கிறேன்" எனத்தன் மனக்கிடக்கையைத் தந்தை வெளியிட, "மங்கையர்க்கரசி" ஐய! அடியேன் தமக்கு அனந்தம் தண்டனிட்டு அறிக்கையிடுவதைத் திமது திருச்செவியில் ஏறக வேண்டுகின்றேன். உலகம் அனைத்தும் ஈன்றளிக்கும் உத்தமிபிறந்த குலம் என்றீர். ஈசனே மருமகனாய் எழுந்தருளிய குடி என்றீர். இந்திரன் செருக்கடக்கிய இறைவன்வழி வந்தகோத்திரம் என்றீர். மதுரைப்பதியாகாமற் போனேமே என்று மாலும் வருந்த இறைவன் திரிந்த பதியென்றீர் இத்தகைய வளம் அமைந்தவரை உடற் கூனலால் இழித்துக் கூறலாகுமோ?

"அரும்பு கோணிடில் அதன் மணங் குன்றுமோ?
இரும்பு கோணிடில் யானையை வெல்லுமால்.
கரும்பு கோணிடில் கட்டியும் பாகுமாம்.
விருப்பு மாறிசை, வீடு பெறுதியால்."

என்று திருவாய்மலர்ந் தருளினள்.

"கேட்டான் மகள்மொழியைக் கேளாரை வாளாலே வாட்டுத் திறலான் மனமகிழ்ந்து." கன்னியின் இசைவைத் தென்னவற் கறிவித்தான். அவனும் பெறுத பெற்றுலென்னப் பெருமகிழ்ச்சி யுற்றுன். வதுவைக்காவன செய்ய மாதுலரை வேண்டிக்கொண்டான். வதுவைக் கமைந்த நாளும்வந்தது. வரவேண்டிய அரசர்களும் வந்தனர்.

"செம்பவளக் கால்நாட்டிச் செம்பொன்னின் உத்தரமிட்
டம்பர்ப் பசுமணியின் ஓடேற்றிப்—பம்பு
வயிரத் தளமிட்டு மாமுத்தக் கோவை
செயிர்தீர நாலுவித்தான் தேர்ந்து."

நல்லோரை யீதென்ன நல்லோர் சொலக்கேட்டு
நல்லார் நடாத்தி வந்த நல்லாளை—எல்லோரும்
கண்டுவக்க ஏற்றினர் கண்டார்கள் கண்கவொடி
தண்டுவக்கும் ஓர் விளக்காய் ஊங்கு"

பாணிக்கிரணம் பாங்குடன் நிறைவேறியது. அக்கினிவலம்வந்து அம்மிமிதித்தானபின்,

"கன்னிநா டன்தனது காதலியோ டுஞ்சிறமேற்
பொன்னிநா டன்கழற்கால் பூண்டிட்டான்—மன்னரெல்லாம்
*வெர்கிட்டான் றன்றுளில் வென்றிட்டான் வீழ்ந்தனனல்
†சென்னிசென்னியே யென்றுர் தேர்ந்து"

தென்னவர்க் கரசன் மன்னவை யறியப், பொன்னி நாடிவன், தன்னதே யென்றனன்.

(இன்னும் வரும்)

ஐ. சாமிநாத முதலியார்,

*Ag. Sub Asst. Inspector of Schools, Tanjore.*

*வெர்கிட்டான்=முதுகு காட்டினன்.

† சென்னி=சோழன்.

# மலேரியா என்னும் விஷ ஜ்வரம்.

(சர்க்கார் பிரசுரம்.)

---

மலேரியா அல்லது விஷஜ்வரமென்பது அபாயகரமான ஒரு வியாதி; இதனால் பிரதிவருஷமும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு—முக்கியமாய் யௌவன பருவத்திலுள்ள ஜனங்களுக்கு—தேக துர்ப்பலமோ அல்லது மரணமோ சம்பவிக்கிறது. கொசுகுகடி மூலமாய் மனிதனின் இரத்தத்தில் புகுந்து அந்த இரத்தத்தையே உணவாகக் கொண்டிருக்கிற கிருமிகளால் இந்த வியாதி உண்டாகிறது. இரத்தத்திலே சிவப்பணுக்கள், வெள்ளையணுக்கள் என்னும் இருவகை அணுக்கள் இருக்கின்றன. விஷஜ்வரக் கிருமிகள் சிவப்பணுக்களைப் பிடித்து அவைகளில் பலவற்றை அழித்துவிடுகின்றன. இக்காரணத்தினால்தான் விஷஜ்வரத்தினால் வருந்தும் ஒருவன் தேகம் வெளுத்து மெலிந்துபோகிறான். மேலும் அக்கிருமிகளால் மண்ணீரலில் நாட்பட்ட வீக்கமும், நோயும், ஏற்பட்டு இதனால் காலக்கிரமத்தில் ஜ்வரக்கட்டி உண்டாகிறது. விஷஜ்வரக் கிருமிகளில் மூன்று வகைகள் உண்டு; அவற்றுள் ஒருவகையானது வெகு வேகமாய் விருத்தியடைகிறபடியால் பிரதி இருபத்திநாலுமணி நேரத்துக்கொருதடவை அவைகளிலிருந்து நூதன கிருமிகள் உற்பத்தியாகின்றன; மற்றொருவகையான கிருமிகள் பிரதி நாற்பத்தெட்டுமணி நேரத்துக்கொருதடவை விருத்தியடைகின்றன; மூன்றாவது வகையில் நூதன கிருமிகள் உற்பத்தியாவதற்கு எழுபத்திரண்டுமணிநேரம் பிடிக்கிறது இப்படி விருத்தியடைவதெல்லாம் மனிதனின் இரத்தத்தில் நேரிடுகிறபடியால் அந்த இரத்தத்தில் நூதன கிருமிகள் முட்டையிலிருந்து வெளிப்படும் தக்ஷணமே ஒருவனுக்கு ஜ்வரம் காணுகிறது. ஆகையால் அவனுக்குக் காணும் ஜ்வரம் இன்னவிதமென்பது கொசுகு கடியினால் அவனுடைய தேகத்துக்குள் என்னவிதமான கிருமி செலுத்தப்பட்டிருக்கிறதோ அதை அனுசரித்ததாகும். முதல்வகையான கிருமியாயிருந்தால் அவனுக்குப் பிரதிதினமும் ஜ்வரம் வரும். இரண்டாம் வகையான கிருமியாயிருந்தால், ஒன்றுவிட்டு ஒருநாள் ஜ்வரம் வரும். (இது சர்வ சாதாரணமானது);. மூன்றாம் வகையானதாயிருந்தால் மூன்றுநாளைக்கொருதரம் ஜ்வரம் வரும்; இவ்வெல்லா விஷயங்களிலும்

நோய்க்குச் சிகிச்சை செய்யாமல் விட்டிருந்தால்தான் மேற்கண்ட படி ஜுரம் வரும்.

இம்மூன்று வகைக் கிருமிகளில் ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கிருமிகளாலும் ஒவ்வொருவிதமான ஜுரம் உண்டாகிறதென்பதல்லாமல் இந்த கிருமிகளில் ஒருவகையைச் சேர்ந்தவைகள் மற்றொரு வகையைச சேர்ந்தவைகளிலிருந்து தோற்றத்தில் வேறுபட்டிருக்கிறபடியால் அணுதரிசனி என்னும் பூதக்கண்ணாடியைக்கொண்டு இரத்தத்தைப் பரீக்ஷித்துப் பார்க்கும்பட்சத்தில் கிருமியின் தோற்றத்தைக்கொண்டு நோயாளிக்கு இன்னவிதமான விஷஜுரம் கண்டிருக்கிறதென்று சாமர்த்தியமுள்ள வொருவன் உடனே சொல்லக் கூடும்,

விஷஜுரங்கண்ட ஒருவனுடைய இரத்தத்தில் இந்த கிருமிகள் வெகு அதிகமாயிருக்கக்கூடும்; ஒவ்வொரு இரத்தத் துளியிலும், அவை நூற்றுக் கணக்காய் இருக்கின்றன. பெண் கொசுகுகள் இரத்தத்தை உண்டு ஜீவிப்பவையாகையால் அவைகள் தங்களுக்கு உணவு கிடைப்பதற்காக மனிதரை நறுக்கென கடிப்பதுமல்லாமல் அவைகளை ஓட்டாமலிருந்தால் ஒவ்வொரு தடவையிலும் பல இரதத்துளிகளை உறிஞ்சிவிடுகின்றன. எவனுடைய இரத்தத்தை கொசுகுகள் உட்கொள்ளுகின்றனவோ அந்த மனிதனுடைய இரத்தத்தில் விஷஜுரக் கிருமிகள் இருக்கும்பட்சத்தில், அந்தக் கிருமிகளில் அநேகம் அந்தக் கொசுகுகளின இரைப்பையில் புகுந்துவிடும். அந்தக் கொசுகானது அனோபிலிஸ் (anopheles) என்னும் ஜாதியைச்சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வகையானதாயிருந்தால் அதன் இரைப்பையிலே ஷை கிருமிகளில் சில விருத்தியாகி இரைப்பையின் சுவரின மூலமாய்த் துளைத்துக்கொண்டு அவ்வவயவத்தின் சவ்வுகளுக்குள் சென்று கடைசியாக அதன் உமிழ்நீர்க் கோளங்களில் பிரவேசிக்கும் அந்தக்கொசுகு மனிதனைக கடிக்கும்போது தன் உமிழ்நீர்க கோளங்களில் அடங்கியிருப்பவைகளில் சிலவற்றை அவனுடைய தோலுக்குள் செலுத்துகிறது; அதனால், நம்மைக் கொசுகு கடிக்கும்போது நம்மெல்லோருக்கும் எவ்வளவோ பழக்கமாயிருக்கிற தினவு

உண்டாகிறது; இந்த உமிழ்நீர்க் கோளத்திலுள்ள பதார்த்தத்திலேதான் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன; ஆகவே, இவ்விதமாக ஒரு மனிதனிடத்திலிருந்து இன்னொரு மனிதனுக்கு ஷை கிருமிகள் மாற்றப்படுகின்றன. இந்தக் கிருமிகள் மனிதனுடைய இரத்தத்தில் வெகு வேகமாய் விருத்தியடைகின்றன. இவை போதுமான அளவுக்கு விருத்தியடைந்தபிறகு, அந்த மனிதனுக்கு ஜ்வரம் கண்டு, அதற்கப்புறம் அது பிரதி 24 அல்லது 48 அல்லது 72மணி நேரங்களுக் கொருதடவை வந்துகொண்டேயிருக்கும்.

விஷஜ்வரவியாதிஸ்தனைக் கொசுகு கடித்தவுடனே அவனிடத்திலுள்ள கிருமியையும் ஜ்வரத்தையும் இன்னொருவனிடத்தில் மாற்றமுடியாது. கொசுகு விஷஜ்வரத்தை உட்கொண்டபிறகு, கிருமிகள் அதன் உமிழ்நீர் கோளங்களில் புகுவதற்குமுன் பலநாட்கள் (சுமார் ஒரு வாரம்) கழியவேண்டும். மேலும் தொத்துவியாதி சம்பந்தமுள்ள கொசுகு தேகாரோக்கியமுள்ள ஒருவனுக்குள் கிருமிகளைச் செலுத்தினவுடனே ஜ்வரம் காணாது. அந்த கொசுகு சில கிருமிகளை மாத்திரமே செலுத்துகிறது; அவைகள் ஜ்வரமுண்டாகும்படி செய்யக்கூடியவைகளாயிருப்பதற்குமுன் அநேக லக்ஷக்கணக்காய் விருத்தியாகவேண்டும். சாதாரணமாக கொசுகுகடியுண்டான பிறகு முதல் தடவை ஜ்வரம் காணும்படி செய்வதற்குப் போதுமானபடி கிருமிகள் வளர்வதற்கு 14 நாளுக்குக் குறையாமலும் 24 நாளுக்கு மேற்படாமலும் பிடிக்கிறது.

எல்லா கொசுகுகளுமே விஷஜ்வரத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையனவைகளல்ல. பல வர்ணமுள்ள இறக்கைகளையுடைய கொசுக்களில் ஆனோபிலேஸ் என்னும் ஜாதியைச் சேர்ந்தவைகளுக்கே அவைகளிலும் பெண் கொசுகுகளுக்கு மாத்திரமே இந்த சாமர்த்தியம் உண்டாயிருக்கிறது.

கொசுகுகளில் மேற்சொன்னவகை போக மற்றதும் மிகு சாதாரணமுமான வகைக்கு குலிஸைஸன்ஸ் என்று பெயர். அவை விஷஜ்வரத்தைப் பரவச்செய்வதில்லை; ஆனால், போகப்போக யானைக்காலில் கொண்டுவந்து விடக்கூடிய ஒருவித கடும்சுரத்தை உண்டாக்குகிற பிலேரியா என்னும் கிருமிகளை ஒரு மனிதனிடத்திலிருந்து

இன்னொரு மனிதனுக்குப் பரவச்செய்கின்றன. ஆகவே கிராமங்களிலும் பட்டணங்களிலும் அவைகளைச் சுற்றிலும் உள்ள கொசுகுகளையெல்லாம் அடியோடு அழிக்கவேண்டும்; ஜனங்கள் பரஸ்பரம் ஒத்துழைத்தால் இந்தக்காரியம் நிறைவேறும்.

வயதுவந்த ஆனோபிலேன் கொசுகுகள் சுவரின்மேல் தங்கும்போது தம் சரீரங்களை மூலைவாட்டாக வைத்துக்கொண்டிருக்கும். அதாவது, தலையும், தும்பியும் (கொசுகுகள் கடிக்கும்வாயின் பாகமும்) சரீரமும் சமரேகையாயிருந்து, கொசுகானது சுவரில் சாய்வாக ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறுமுள்ளைப்போல் காணப்படும்; இந்த அடையாளத்தைக்கொண்டு இந்த ஜாதிக் கொசுகுகளைத் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் கொசுகுகள் சுவரினமேல் தங்குகையில் அவைகளின் சரீரம் சுவர்மட்டத்துக்குச் சரியாயிருப்பதுடன கூன்முதுகுள்ளவைபோல் காணப்படும் ஆனோபிலேன் கொசுகுகள் இளங் கபிலநிறமுள்ளவைகளாகவோ கருங் கபிலநிறமுள்ளவைகளாகவோ இருக்கும்; குலிஸைன் கொசுகுகள் சாம்பல் நிறமாகவோ கபில நிறமாகவோ கரு நிறமாகவோ இருப்பவைகளாய் வெண்ணிறப் பட்டைகள் அல்லது கீற்றுகள் உடையவைகளாயிருக்கும். ஆனோபிலேன் கொசுகுகளின் இறக்கைகளில் புள்ளிகளிருக்கும்; குலிஸைன் கொசுகுகளின இறக்கைகள் சாதாவாயிருக்கும்.

எல்லாக் கொசுகுகளும் ஜலத்தில உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன புழுத்தசையிலுள்ள (larvae) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுகுகள 24மணி நேரமுதல் 48 மணிநேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக் கீழ் இருக்கவேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வரவேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால் நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுகுகள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளரமுடியாது.

---

(இன்னும் வரும்)

# * நாட்டுக்கோட்டையாரும் கல்வியும்.

"கல்வி"யென்ற ஒரு சிறந்த பொருள் யாவரும் விரும்பத் தக்கது. அது எல்லாவகையிலும் மனிதனுக்கு அநுகூலமானது. ஒவ்வொரு மனிதனும் தன் ஜீவனத்துக்குப் பிறர்கை பார்த்து நிற காமல் கல்வி கற்றே ஏதாவது ஒரு தொழிற்செய்து அதன் மூலமாக ஜீவிக்கவேண்டிய அவசியமானதால் பொதுவாக எல்லோருக்கும் அது அவசியமே யாகும்.

ஆனல் இப்போது சிறப்பாக நம்மவருககுக் கல்வி யெவ்வளவு அவசிய மென்பதைப்பற்றி மட்டும் ஆராய்வோம. நம்மவருக்கு எல லா நலன்களும் பெருமையும் நிரம்பியிருந்தும் இந்தக் கல்வியில்லாத குறை பெருங்குறையாக விருககிறது. அதாவது அழகியதும் அபூர்வமானதுமான பொருள்கள் நிரம்பிய ஒரு அற்புத மாளிகை யில் தீபமில்லாத குறைபோ லிருக்கிறது. இநதக குறைமட்டும நம்மை விட்டு நீங்கிவிட்டால் நமது பெருமை அளவு கடந்து பிரகா சிகரும். தற்காலத்தில நம்மவர் கற்கிற கல்வி நிரம்பப் பிரயோஜன மறறது. நமது திண்ணைப் பள்ளிககூடத்து உபாத்தியாயர் சிலாகருப் பெருமபாலும் உயிர்மெய்யெழுததுககள் தெரியாது "ள, ழ-ர, ற- ண, ன, ந" முதலிய வெழுத்துக்களின் பேதங்கள் தெரியாது. இன்னும் பல குற்றங்களோடு நம் பிளளைகள் கறகிறார்கள். அப்ப டிக் கற்ற பிள்ளைகளைப்பற்றி நாமெப்படி குறைகூறுகிறது. பிள்ளை கள் பெரியவர்களான பொழுதும இநதக்குறை பெருங்குறை யாகவே யிருககிறது. இது பிறர் நகைத்தற்கு இடமாகிறதென்று நான் சொல்லவேண்டியதில்லை. தாய்ப்பாஷை கற்பதில் இவ்வளவு அஜாக்கிரதையாக விருப்பது எவ்வளவு குறைவென்று நீங்கள் யோசித்துப பாருங்கள். கலவியில்லாத செல்வம என்ன பிரயோ சனமுடையது? சந்திரனில்லாத வானத்துக்கும் கல்வியில் லாத செல்வத்துக்கும் பேதமுண்டா? நன்மை, தீமை-பாப புண்ணிய

* இதுசண்ட மாணிக்கத்தில் 16—10—11ல் கூடிய ஒரு பெருங்கூட் டததின் முன் ஸ்ரீ மு. சின்னையா செட்டியாரவர்கள் செய்த உபந்நியாசத் தின் சங்கிரகம்.

ங்களைப் பகுத்தறியும் சக்தி கல்விக்குரியதன்றோ? பகுத்தறிவில்லாத மனிதனை விலங்கோடொப்ப நோக்குவர். "தக்க இன்ன தகாதன இன்னவென் றொக்க வுன்னல ராகி லுயர்ந்துள மக்களும் விலஙகே."

இந்தக் கல்வியானது, இம்மையில் கௌரவமான வாழ்க்கையை ஈந்து மறுமையில் வீட்டைடதற்கு வழிகாட்டியாக உதவுகிறது. இதைப் பார்க்கிலும் மனிதனுககு அவசியமான பொருள் வேறேயொன்றுமில்லை. இவ்வளவு அருமையான கல்வி விஷயத்தில் நம்மவர் கவனஞ் செலுத்தாதிருப்பது எவ்வளவு விசனகரமான விஷயம்!நமது "சன்மார்க்க சபை"யின் பிரயோஜனமாக சமீபத்திற் சிறிது கிளர்ச்சியுண்டாகி சில ஊர்களில் வித்தியாசாலைக ளேற்பட்டிருக்கின்றனவெனினும், அப்படியே நம்மவர் வசிக்கிற ஒவ்வொரு ஊரிலும் ஏற்படவேண்டும். அதோடு பிள்ளைகளை நன்றாய்ப் படிப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு பிதா மாதாவுக்கும் உண்டாகவேண்டும். பிள்ளைகளை நிரம்பச சிறுவயதில் வியாபாரத் துறையால் விடுபதைச் சற்று நிறுத்தி நன்றாய்ப் படித்தபிறகு வியாபாரததுக் காரம்பிக்கச் செய்கிற வழக்கம் அனுட்டிக்கப்பட வேண்டும். நமது சிறுவர்கள் ஒவ்வொருவரும், எழுத்துப்பிழை முதலிய இலக்கணக் குற்றமின்றியும் கொண்ட கருத்தை சுருக்கமெழுதி விளக்கவைத்த நிலைமை அழகோடு கடிதம் எழுதவும், பேசவும், ஏதாவது செய்யுட்களைப் படித்துத் தாங்களே விளக்கமான பொருள்களை யறிந்து கொள்ளக் கூடியதாகவும, கற்றுவிட்டால் அதுவே போதுமானது. அதற்குமேல் சௌகரியம்போற் செய்யலாம். இது விஷயத்தில் இனியொரு நிமிஷமேனும தாமதிப்பதிற்கில்லை.

இதோடு நம்மவர் ஆங்கிலபாஷை கற்கவேண்டியதும் அவசியமாகிறது. அது இராஜபாஷையாக விருப்பதோடு தற்காலத்துக்கு அதிகப் பிரயோஜனமுடைய பாஷையாகவு மிருக்கிறது. நாம் ஆங்கில மட்டும் கற்றிருந்தால் எந்தத் தேசத்திற்குச சென்று வியாபாரஞ்செய்ய விரும்பினாலும் அல்லது, சுற்றுப்பிரயாணஞ் செய்ய விரும்பினாலும் அத்தேச பாஷையைப் பற்றி நமக்கு கவலை

யே இராது. ஆங்கிலங் கற்பதால் புதுக்கிளர்ச்சியும் பொது நோக்கமும் அநாவசியமான பழைய வழக்கங்களை மாற்றுதற்கு தைரியமும், புது முறைகளை யனுட்டிக்க யுக்தியும், புதியதொழில் வியாபாரங்களைச் செய்யும் சக்தியும், இன்னும் அனேக நன்மைகளு முண்டாகும். இப்போது நம்மவர் பறபல தூரதேசங்கட்கும் சென்று பெரிய பெரிய வியாபாரங்கள செய்வதால் அங்கு ஆங்கிலபாஷை யின் உதவியில்லாமல் நிரமபக கஷ்டமாயிருப்பது நீஙக ளறிந்ததே. ஒவ்வொரு நாளும் நமக்கு ஆங்கிலபாஷை முன்வந்து நிற்கின்றதும் அதை நாம் நேரி லறியககூடாமல் பிறர் வாய்பார்த்து நிற்பதும் எவ் வளவு குறைவும் காரியக்கேடு மென்பதை நீங்கள் யோசித்துப் பாருஙகள! ஆஙகிலம் அதிக பிரபலமடைந்த இக்காலத்திலும் நம்ம வர் ஒருவர், இங்கிலீஷ் பேசுவதென்றால் வெகு ஆச்சரியமாக விருக் கிறது. நமககுத் தாய் பாஷையான தமிழ் எவ்வளவு அவசியமோ அதற்கு ஒரு படி விசேஷமாகவே இக்காலம் ஆங்கிலபாஷை அவசி யமாகும். தற்காலம் நமது தொழில் அல்லது வியாபாரத்துக்கு இத்த கைய கல்வி நிரமப முககியமானதென்று அனேக புத்திமான்கள அபிப்பிராயப் படுகிறார்கள். சமீபததில் நமது சப்மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான். ஸ்ரீநிவாசஐயரவர்கள் "சன்மார்க்க சபை"யில் அக்கிராசன மேற்றுப் பேசிய பேச்சில இதையே வற்புறுத்திப் பேசினார்கள். கல்வியில்லாக குறையால், நமமுள் ஒற்றுமையில்லாமல் சிறிய பெரிய எல்லா விஷயஙகளிலும் விவகாரமுண்டாகி, கஷ்ட நஷ்டங்க ளேற்படுகின்றன. ஆகலால் கல்வியை விருத்திபண்ண வேண்டியது நம்மவரின் முதற்கடமையும் முக்கிய கடமையுமாக இருக்கிறது.

ஆங்கிலங் கற்றற்கு நமது பிள்ளைகள் கொழும்பு, மதுரை, சென்னை, புதுக்கோட்டை முதலிய விடஙகட்குப் போய் அசௌகரி யத்தோடு படிப்பதைப் பார்க்கிலும் நம்மவர் வசிக்கிற பெரிய ஊர் களான தேவகோட்டை, காரைககுடி, கானாடுகாத்தான் முதலிய விடங்களில் உயர்தர வித்தியாசாலை (High School) களும் அதை யொட்டி மாணவர் விடுதி வீடு (Boarding house) களும், ஏற்பட்டு விட்டால நிரயப சௌகரியமாக விருப்பதோடு ஜாஸ்தியான பிள்ளை கள படிக்கவும ஏதுவாகும். இந்த முக்கியமான தர்மத்தை நகரத் தார் கவனித்துக கூடிய விரைவிற் செய்வார்களென்று நம்புகிறேன்.

இனி இதோடு நமது ஆண்பிள்ளைகளைப் போலவே, பெண்பிள்ளைகளையும் படிப்பிக்கவேண்டியது நிரம்ப அவசியமாகிறது. நமது பெண்கள் படிக்காதினால் நமது சரீரத்திற் பாதிப் பலம் குறைந்திருக்கிறது. நமக்குப் பல அசௌகரியங்களுண்டாகின்றன அதனால் இல்வாழ்வின் சுகங்களை நாம் பெரும்பாலு மிழக்கவேண்டியதாகிறது. பெண்கள் படித்திருப்பார்களானால் அது நமக்கோர் புதையலெடுத்த தனம்போலாகும். அனேக விஷயங்களில் நமக்கு உபகாரமாக அவர்கள் இருப்பார்கள். நமது வாழ்க்கை யிப்போதிருப்பதைப்பார்க்கிலும் விசேஷ கௌரவமுள்ளதாகும். இதை விரித்துப் பேசுதற்குக் காலம் போதாமையால் பெண்கல்வி அவசியமென்பதைப் பலமுறையாக வற்புறுத்திமட்டும் அதை நிறுத்துகிறேன்.

இனி, தர்மம் செய்கிற விஷயத்தில் நமக்கு நிகராக ஒரு ஜாதி இந்தத் தென்னிந்தியாவி லிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நாம் செல்லுகிற வழியை (Line) மட்டும் சிறிது மாற்ற வேண்டியதாயிருக்கிறது தறகாலம் பெரும்பாலும் சிவாலயம் பாடசாலை சத்திரம் முதலிய தர்மஙகள் மட்டும் கவனிக்கப்படுகின்றன. அவைகள் உத்தம புண்ணிய மென்பதி லையமில்லை ஆனால் மற்றப் புண்ணியங்களை மறந்திருப்பதும் ஞாயமில்லை. பொதுஜனங்கட்கு உபகாரமாக பாதை வசதி (Road), வைத்திபசாலை (Hospital), ஏழைகட்குக் கஞ்சிவார்த்தல், வித்தியாசாலை முதலிய விஷயங்களிலும், நாம் கவனஞ் செலுத்தவேண்டும். அவைகளும் நமது ஈசனுக்கு அதிகப் பிரீதியை யுண்டுபண்ணு மென்பதை மறக்கக் கூடாது.

“இம்மை பயக்குமால்: ஈயக்குறை வின்றால்:
தம்மை விளக்குமால்: தாம்உளராக் கேடின்றால்:
எம்மை உலகத்தும் யாம்காணோம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.”

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.”

இராமநாதன்.

# கீர்த்திபெற்றசில் கிரேக்கரும் ரோமரும்.

## A. பிளேட்டோ கி. மு. (429—347)

அரிஸ்டாக்கிளிஸே ஆம் இவர் இயற்பெயர்.
தேக வலிமையிற் சிறந்தவ ராகியும்
பாவல ராயும் படைவல ராயும்
விளங்கிய கிரேக்க வித்தக ராம்இவர்,
பரந்த தோளுடைப் பலாட்டிய ராதலின்
பிளேடோ எனும்பெயர் பெற்றனர் என்பர்.
ஆதன்ஸ் நகரே அவர்பிறப் பிடம். அவர்
அரிஸ்டா டிலின்நல் ஆசான் ஆயினோர்.
சாக்கிரட் டீஸிடம் தத்துவம் பயின்றவர்.
சிலராங் தம்குரு காலஞ் சென்றபின்,
இட்டலி, ஸிஸிலி, ஈஜீப்ட் ஆகிய
நாலு இடங்களும் ஞானமும் அறிவும்
பெறுவான் சென்ற பெரியவர். அவர்பால்
வைரமீக் கொண்டு ஸைரக்கூஸ் ஆண்ட
தியோனிஸிஸ் என்னும் தீயோன் அவரை
அடிமையா விற்றனன்; ஆயினும், அவருடை
ஞான மாதிய நன்கறிந் தவரை
விலைக்குப் பெற்றோன் விடுவித் தனன். பின்
ஆதென்ஸ் வந்து மீதிப் பொழுதெலாம்
"ஆன்மா நித்திய மானது: மனிதன்
ஐம்பொறி வாயிலாய் அறிவுறு கிறதிலை:
இயற்கை யிலேயே இவன் ஒருநீசதனன்:
ஒன்றுடனேஒன் றொன்றுதல் இல்லா
ஈசனும் அசித்துமே எப்பொருள்களுக்கும்
முதல் முடிவில்லா மூலகா ரணங்களாம்:
நாலு வகையுள்ள ஞானமும், நன்றாய்
ஓர்ந்திடுங் காலை, ஒன்றாக் கொன்று
சார் பாய்முடிவில் ஓர் பாவனையையே

ஏய்வனவாகும்'' என்பன ஆதிய
சுத்தசன் மார்க்க தத்வபோ தனைகள்
பலர்க்கும் புரிந்து,தம் பரமா சிரியரின்
தெய்வச் சரிதையைத் தீட்டிய பினனர்,
உலகம்நீங் கிப்புகழ் உடம் பெய்தினரே..

## B. ஸாக்கிரட்டீஸ் கி. மு. (469—399)

---

ஏறக் குறைய இருநூற் றைம்பது
நூற்றூண் டுகட்குமுன், நாற்றிசை யும்புகழ்
சாக்கிரட் டீஸ்எனும் தத்துவ சாஸ்திரி,
ஆதன்ஸ் செய்த அருந்தவப் பயனுத்
திருஅவ தரித்தனர் ஒருசில காலம்
தந்தை யொடுகல் தச்சனு யிருந்து, பின்,
சேனையிற் சேவகம செய்து, செனபன்,
ஆல்கிபி யாடிஸின் ஆருயிர் காத்தனர்.
சாந்தமே அறியா சாந்தபி யுடனே
இல்லறா நடாத்திய இப்பெரும் புண்ணியர்,
யுத்தம முடிந்தபின் தததுவம ஆய்நது,
வறுமையைப் பெருமையா வலியவே கொண்டு, தன்
நகரச் சிறுர்க்கு நல்லா சிரியராப்
ஆத்ம ஞான அறிவுறுத் தினர். அவர்
பொய்ப்பகை யாகவும் மெய்க்கணி யாகவும்
விளங்கலும, அவருடை விரோதிக ளாகிய
வாமா சார வஞ்சகர் சில்லோா
" மதத்திற் பறபல மாறுத லுடன்அவர்
தெய்வநிந தனையும செய்தனர்'' என றும்,
பாலர் மனங்கெடப் பண்ணினா'' என் றும்,
குற்றஞ் சாற்றிக் கொடிய தாகிய
மரண தண் டனையுமஅும் மஹான்பெறச் செய்தனர்.
ஆயினும் அவரிடத் தேஅதி அன்புள
சீடரும், காவற் கூடத் தலைவனும

ஓடி ஒளியுமா உரைத்தனர் அவர்க்கு.
சாக்கிரட் டீஸ்இதைச் சற்றுமொப் பாமல்
"எங்குச் சென்றால் இறப்பிலை? சொல்லும்.
ஆறிலும் சாவு நூறிலும் சாவு.
சாவுக் கஞ்சேன்; சத்தியம் பேணுவேன்."
எனவுரைத்து எவருமே இறும்பூது எய்திட
நகைமுகத் தொடு, கொடு நஞ்சினை அருந்தி
மண்ணகம் நீங்கி விண்ணடைந் தனரே

**C. தல்லி கி. மு (106—43)**

உ— ரோமா புரிக்கொரு சிரோமணி யெனத்தகும்
மாட்சிமை வாய்ந்த மார்க்கஸ் தல்லியஸ்
சிசரோ என்பவர் சிறந்த நாவலர்.
அறிவபி விர்த்திக் காகப் பலதினம்
நானா இடங்களும் நாடிச் சென்று
தத்துவம் ஆய்ந்து வித்தக ராயினோர்.
நியாயவா தத்திலும் கியாதிபெற் றவரே.

**D. யூலியஸ்**

இதோ காவின் இறைவனு கியஇவர்,
எழில்மிக் குடைய எலன்சிறை மீட்கத்
திராய்க்குச் சென்ற தீரரிற் சிறந்தவர்.
முற்றுகை முழுதும் முடிந்தபின் தன்னூர்
திரும்புங் காலை தியகாற் றடித்ததால்
மார்க்கம் ஒரீஇ அவர் மரக்கலம் முன்பவர்
அறியாக் கரையினை அடையவே, புதிதாம்
பலவிடம் சென்று பன்னரும் விபத்துற்
றவற்றினிற் றப்பி அநுபவ முதிர்ச்சியால்
அறிஞ ராகி அடைந்தனர் ஊரே.

ம. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி.

மஹாகவி விசாகதத்தரால் இயற்றப்பட்ட

# முத்ரா ராக்ஷஸம்

## என்னும் நாடகம்.

### ப்ரஸ்தாவனை

---

ஸூத்ரதாரன் :—

(1) இவள் யார்? "தாங்கள் சிரஸிலணியும்படி அவ்வளவு பாக்யம் பெற்றவள்!

* "சசி கலா!"

"இதுதானா இவள் பெயர்?"

"இதுதான் இவள் பெயர். உனக்குத்தெரிந்தும் ஏன் மறந்து விட்டாய்?"

"யான் சந்திரனைக் கேட்கவில்லை அந்தப்பெண்ணை யல்லவோ கேட்கின்றேன்."

"ஆஹா! அப்படிச் சந்திரனைக் கேட்க விருப்பமில்லாவிட்டால் இப்பெண் † விஜயாளையே கேட்டுக்கொள்".

'தன் தலையிலணிந்திருக்கும் கங்காதேவியைப் பார்வதி யறியாவண்ணம மறைக்கும் பொருட்டு, இவ்வாறு பரமசிவனால் பேசப்படும் யுக்திவாதமானது நம்மை ரக்ஷிக்கட்டும்.

(2) நர்த்தனம் செய்கையில தன காலடி பலத்தால் பூமி பிளந்துவிடாமல் காக்கும் பொருட்டு மெதுவாய் கால் வைப்பதும், எல்லா லோகங்களையும அதிக்ரமித்திருக்கின்ற தன் புஜங்களை யடிக்கடி சுருக்கிக்கொண்டு அபிநயம் செய்வதும, எரித்துவிடுமென்ற பயத்தால் தன் பார்வையை ஒரே வஸ்துவில் செலுத்தாதிருப்பதும்—இவ்வாறு, பிரபஞ்சத்தின மேலுள்ள இரக்கத்தால் முப்புரங்களையும் எரித்த பரமசிவன் சிரமப்பட்டுச் செய்யும் நர்த்தனமானது நம்மை ரக்ஷிக்கட்டும.

(நாந்தி முடிவு)

---

* சசிகலா=சந்திரகலை. † விஜயாள்:—பார்வதியின் தோழி.

ஸூத்ரதாரன்:—அதிகமாய் ப்ரஸங்கிப்பதேன்? உயர்குலத்துதித்த வடேச்வர தத்தரின் பௌத்திரனும், மஹாராஜ னென்று பட்டம்பெற்ற 'ப்ருது' என்பவரின் புத்திரனுமான, மஹாகவி விசாக தத்தரால் இயற்றப்பட்ட 'முத்ரா ராக்ஷஸம்' என்ற நவீன நாடகத்தை இன்று நடத்தும்படி இம்மஹா சபையோர்களால் யான் ஆக்ஞாபிக்கப்பட் டிருக்கின்றேன். மேலும், மஹா காவ்யங்களின் அருமையறிந்த வித்வான்கள் நிறைந்த இச்சபையின்கண், இந்நாடகத்தை நடத்த எனக்கே குதூகலமா யிருக்கின்றது வென்றால்:—

(3) மூடனால் இடப்பட்டதாயினும் நல்ல பூமியிலிடப்பட்ட பயிர் நன்றாய் விருத்தியடைகின்றது. பயிரின் செழிப்பு விதைப்பவன் குணங்களைச் சார்ந்ததன்று.

ஆகையால் இப்பொழுது என் கிருஹம் சென்று பரிஜனங்களுடன் என் மனைவியை யழைத்துவந்து ஸங்கீதம் ஆரம்பிக்கின்றேன்.

(சற்று நடந்து பிறகு பார்த்து)

இதோ எனது கிருஹம் வந்துசேர்ந்தேன். அதனுட் புகுகின்றேன்.

(உட்புகுந்து பார்த்து)

"ப்ரியே! ஏது! நமது மனையில் ஓர் மஹோத்ஸவம்போல் காணப்படுகின்றதே! நமது பரிஜனங்கள் ஒவ்வொருவரும் தன் தன் காரியங்களை யதிக ஊக்கமுடன் செய்கின்றார்கள்.

(4) ஜலம் கொண்டுவருகின்றாள் ஒருத்தி. வாஸனை கலக்கின்றாள் இன்னொருத்தி. பல்பலவிதமான மாலைகள் தொடுக்கின்றாள் வேறு ஒருத்தி. அடிக்கடி பெருமூச்செறிந்துகொண்டு உலக்கையா லிடிப்பவள் பின் ஒருத்தி!

சரி! இருக்கட்டும்! என் மனைவியை யழைத்துக் கேட்கின்றேன்.

(நேபத்யத்தை நோக்கி அழைக்கின்றான்)

(5) குணவதி! ஸகல உபாயங்களு மறிந்தவளே! கிருஹஸ்த தர்மத்தை மூவிதமாகவும், ஸாதிப்பவளே! என் கிருஹ தந்திரங்க ளறிந்தவளே! விரைவாய் வா.

(ப்ரவேசம்) நடி.

நடி:—ஆர்ய! இதோ வந்துவிட்டேன். என்னை ஆக்ஞாபித் தருளவேண்டும்.

ஸூத்ரதாரன் ஆர்யே! ஆக்ஞாபிப்பதெல்லா மிருக்கட்டும். இங்கே என்ன நடக்கின்றது? நமது குடும்பத்தை அனுக்கிரஹிக்கும் பொருட்டு அந்தணர்களை அழைத்திருக்கின்றாயா? அல்லது அதிதி கள் வந்திருக்கின்றார்களா? ஏது விசேஷமான பாகங்களெல்லாம் ஆகின்றனவே.

நடி :—ஆர்ய! ப்ராஹ்மணோத்தமர்களை யழைத்திருக்கின்றேன்

ஸூத்ரதாரன் :—என்ன விசேஷம்?

நடி :—இன்று சந்திர க்ரஹணமல்லவா!

ஸூத்ரதாரன் :—ஆர்யே! யார் சொன்னது?

நடி :—இவ்வாறு இந்நகர ஜனங்கள் சொல்லுகின்றார்கள்.

ஸூத்ரதாரன் :—நானோ ஜ்யோதி சாஸ்திரத்தின் அறுபத்து நான்கு அங்கங்களு மறிந்தவன். ஆயினும் அந்தணரை யுத்தேசித்து இன்று சந்திரகரஹண மென்று யாரோ ஏமாற்றிவிட்டார் பார்!

(6) க்ரூர க்ரஹமான *"கேது" என்பவன், பூர்ணமாய்ப் ப்ர காசித்துக்கொண்டிருக்கும் †"சந்திரனை" பலாத்காரமாய் ஜயிக்க விரும்புகின்றான்—

நேபத்யத்தில்

யான் உயிருடனிருக்கும்வரை யார் அவன்—

* கேது=மலய கேது என்ற அரசன்.

† சந்திரன்=சந்திரகுப்தன்

ஸூத்ரதாரன்:—ஆனால் ‡ புதன் வரவால் இவன் ரக்ஷிக்கப்படு கின்றான்

நடி :—ஆர்ய! 'இம் மண்ணுலகி லிருந்துகொண்டு, க்ரஹண பீடையினின்றும் சந்திரனை ரக்ஷிக்க யாரோ ஒருவன் விரும்புகின் றானே! அவன் யார்?

ஸூத்ரதாரன்:—ஆர்யே! ஆமாம். வாஸ்தவந்தான். நான்கூட கவனிக்கவில்லை. மறுபடி சொல்லுகின்றேன். அவன் குரலினால் அவனை யறிந்துவிடலாம். ("க்ரூர க்ரஹமான கேது" என்ன மறு படி சொல்லுகின்றான்)

(நேபத்யத்தில்)

யார் அவன் யான் உயிருடன் இருக்குமளவும் சந்திரகுப்த மகாராஜனை யசைக்க வல்லவன்?

ஸூத்ரதாரன் :—(கேட்டு) ஆர்யே. அறிந்துகொண்டேன். ¶ கௌடில்ய னல்லவா?

நடி :—(பயப்படுகின்றாள்)

ஸூத்ரதாரன் :—ஆஹா! இவன் வக்ரபுத்தியாகிய சாணக் யன். தன் கோபாக்நியால் நந்த வம்சமுழுமையும் எரித்தவன், "சந்திரன்," "க்ரஹண" மென்று கேட்டவுடன், மௌர்ய வம்சத்தரசனை சந்த்ரகுப்தனுடைய பகைவர் என்று எண்ணு கின்றான்.

சரி! நாம் அப்புறம் செல்வோம்

(மறைகின்றார்கள்)

(ப்ரஸ்தாவனை முற்றிற்று.)

**R. வேஙகடநாராயண சர்மா B. A. B. L.,**

---

‡ புதன்=புத்திமானான சாணக்யன்.]

¶ கௌடில்யன்=சாணக்யன்.]

# மாலினீ மாதவம்

அல்லது

# தர்மவிஜயம்

## ஐந்தாவது அத்தியாயம்.

### தர்பார்

### Durbar.

நமது சரித்திர காலத்தில், மணிபுரத்தை யாண்டுவரும் ஜமீன்தார் கிருஷ்ணராஜன், தன் தமையன் இருபது வருஷங்களுக்கு முன், கொலையுண்டு அகால மரணமானபிறகு, சட்டப்படி தனக்கு இஜ்ஜமீன் கிடைத்ததாகிலும், தன் தமையன் மேலுள்ள மெய் யன்பால், அவர் நினைவு தன்னுள்ளத்தை யெப்பொழுதும் வருத்திக் கொண்டிருந்ததாலும், மகுடாபிஷேகம் முதலிய மகோத்ஸவம் ஒன்றும் கொண்டாட மனம் ஸகியாதவராயும், ராஜகோலங்கள் கொள்ளாதவராயும், இதுவரைச் சென்னையிலேயே தன் வாழ்நாளைக் கழித்துவந்தார்.

இப்பொழுது சிலநாட்களாய், மணிபுரம் ஜமீன்தார் தாமே நேரில் மணிபுரத்திலிருந்தே ராஜ்யபாரம் செய்யப் போகிறார் என்றும், இருபது வருஷத்துக்கு முன் நடக்கவேண்டிய பட்டாபிஷேக மஹோத்ஸவம் இப்பொழுது விநோதமாயும், கோலாகலமாயும் நடக்கப்போகிற தென்றும், அதுவுமன்றி, தமைய னிறந்தது முதல், உலகப்பற்றையும் சிற்றின்பத்தையுமே வெறுத்திருந்த மஹாராஜா அவர்கள், இப்பொழுது பாலூர் ஜமீன்தாரின் புதல்வி மாலினியை மணஞ்செய்யப் போகிறார் என்றும், இன்னும் பற்பலவிதமான ஸந்தோஷ ஸமாசாரங்கள், இம் மணிபுர நகரிலும், மதுரை ஜில்லாவிலும், மற்றுமுள்ள இதர ஜில்லாக்களிலும் பரவின.

நமது சரித்திர தினத்தில் மணிபுரம் முழுமையும் ரமணீயமாயும், கோலாகலமாயும், விளங்கிற்று. வீதிகள்தோறும் அணியணியாய் நாட்டப்பட்ட துவஜங்களாலும், தோரணங்களாலும்,

விசித்திரமான கோலங்களாலும், பூமாலைகளாலும், அலங்கரிக்கப்பட்டிருந்தன. அரண்மனைகளும், ராஜவீதிகளும், அதியற்புதமான சித்திரவேலைகளுடன் கூடிய பூம்பந்தர்களாலும், சித்திரப் பிரதிமைகளாலும்; 'நல்வரவு'த் தோரணங்களாலும், இனிமையான வாத்திய கோஷங்களாலும், ஆங்குள்ளோர் மனத்தைக களிக்கச் செய்துகொண்டிருந்தன. ஓர்புறம் நாகஸரவாத்யம், ஓர் புறம் 'பாண்டு' வாத்யம், ஓர் புறம் பாட்டுக்கச்சேரி, சிலவிடங்களில் சதிர்க்கச்சேரி முதலிய விநோதங்கள் ஆங்காங்கு ஜனங்களின் மனதைக் கவர்ந்துகொண் டிருந்தன.

அநேக விடங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாய் வந்துகொண்டிருந்தனர். அநேக ராஜாங்க உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும், துரைமார்களும இம்மஹோத்ஸவத்தைப் பார்க்க வந்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும, ஒவ்வொரு வகுப்பினர்க்கும் தனித்தனி 'ஜாகாக்கள்' ஏற்படுத்தப்பட்டிருந்தன. துரைமார் விருந்துக்காக "ஸ்பென்ஸர் கம்பேனி," "டி, ஏஞ்ஜலிஸ்" முதலான உயர்ந்த கம்பெனிகளிலிருந்தும், சுமார் 1300 ரூபாய்வரை செலவு செய்து உயர்வகை உணவுகள் தருவிக்கப்பட்டிருந்தன இவ்வளவு கோலாகலமாய் மணிபுரம் ஜமீனதாரின் பட்டாபிஷேக மஹோத்ஸவ ஏற்பாடுகள் நடந்துகொண் டிருக்கின்றன.

அதிகமாய் வளர்ப்பதேன்? பட்டுக்களாலும், பூமாலைகளாலும், அலங்கரிக்கப்பட்டு, இரண்டு வெள்ளைத குரகங்கள் பூட்டப் பூட்ட ஓர் வண்டியின்மீது ஜமீனதார் ஆருடராய், முன்னும் பின்னும், விதம் விதமான வாத்தியங்கள் முழங்க, உத்தியோகஸ்தர்களாலும், பட்டணத்தாகளாலும், சூழப்பட்டவராய் ராஜவீதி வழியாய், ஊர்கோலம் வருகின்றார். அப்பொழுது ஜனங்களடைந்த உத்ஸாகமும், ஸந்தோஷமும் அளவிறந்தனவா யிருந்தன.

திடீரென்று ஜமீன்தார் வண்டியில் பூட்டிய குதிரைகள் திமிற ஆரம்பித்தன. பக்கத்திலுள்ளோர் யாவரும திடுக்கிட்டார்கள். ஸாரதி குதிரைகளை யதிக சிரமப்பட்டு அடக்கி நிறுத்திக குதிரைகளையும் தட்டிக் கொடுத்தான்.

யாது காரணமென்று திரும்பிப் பார்த்து விசாரிக்கையில், நமது பரதேசி, தன் கையால் "சோட்டா"த் தடியைக் குலுக்கிக் கொண்டு "தர்மமே நிச்சயம்," "தர்மமே நிச்சயம்" என்று கோஷித்துக்கொண்டு, குதிரைகள் முன் நின்றுகொண் டிருந்தார். ஜமீன்தார் கண்களும், பரதேசியின் கண்களும் பரஸ்பரம் நாடின. ஜமீன்தார் மனம் கலங்கிற்று. இதற்குள் வாத்திய கோஷங்களும், விநோதங்களும் நின்றுவிட்டன. அடைப்பக காரரில் சிலர் ஓடிவந்து 'அடே! பண்டாரப்பயலே' என்று பய முறுத்திக்கொண்டு பரதேசியின் கழுத்தில் கைபோட்டார்கள். இதற்குள் திவானும் வந்துசேர்ந்து, "அவரையொன்றும் செய்ய வேண்டாம். ஏதோ புத்தி தடுமாறினவர் போலக் காணப்படுகிறார். மேலும், ஸந்தோஷ காலததில் நமது நாட்டில் ஒருவனும் துக்க மடையலாகாது' என்று சொல்லிவிட்டு, ஜமீன்தார் முகத்தைப் பார்த்தார். முகத்தில் செழிப்பேயில்லை. மனக்கலக்கம் முக விகா ரத்தால் வெளியாயிற்று. இதற்குள் திவான், தம் பணப் பையி னின்றும், 4, 5 கால் ரூபாய்களை எடுத்துப் பரதேசி முன் எறிந்து, "ஓய்! பண்டாரம்! ஓடிப்போம். இனி இங்கே நில்லாதேயும்!" என்று உரகக அதட்டி ஆக்ஞாபித்தார். பரதேசி அந்நாணயங் களைப் பொறுக்கிப் பக்கத்தில நின்று வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த ஓர் ஏழை பண்டை கொடுத்துவிட்டு, மறுபடி ஜமீன்தாரை யும், திவான் முதலானவர்களையும், நோக்கி "நான் பண்டாரந்தான். நீயும் பண்டாரநதான். உன் காசுக்கு வரவில்லை நான். "தர்மமே நிச்சயம்." கெடுவான் கேடு நினைப்பான். "தர்மமே நிசசயம்" என்று கோஷிததுக்கொண்டும் தன் 'சோட்டா'த் தடியால் தரையில் தட்டிக்கொண்டும் திடீரென்று திரும்பிக் கூட்டத்துக்குள் மறைந் தார்.

ஜமீன்தார் தன் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டார். 'ஏதோ கிறுக்கன்போ லிருக்கிறது' என்று திவான் சமாதானம் சொல் லிப் பிறகு அங்கிருந்தோரை நோக்கி 'சரி! உங்கள் அலுவல்களைக் கவனியுங்கள்', என்று ஆக்ஞாபித்துவிட்டுத் தன் வண்டியிலேறிக் கொண்டார்.

நமது மஹாராஜாவின் உபக்ரஹங்கராய் விளங்கும் வீரன், வெறியன் முதலானவர்கள் "என்னடா! ஒரு பரதேசிப்பயல்! சும்மா கண்டபடி பேசறது—நம்மா—ர்சாவை—இப்படியே—நச்சுன்னிட்டு— ஒரே— அடியிலே— பண்டாரப்பயலை நிமித்திரவா மெண்டு பார்த்தேன்—திவானெசமாங்க—கெடுத்தூட்டாங்க-என்று பிதற்றிக்கொண்டு சென்றார்கள். இவ்வற்புதக் காட்சிகளைக் கவனித்துக்கொண்டிருந்தவர்களில் சில புத்திமான்கள் மாத்திரம், இதை யவ்வளவு ஸாதாரண ஸம்பவமாய் அபிப்பிராயப்பட வில்லை. இது ஏதோ அதிசயமாய் இருக்கிறது. அவ்வளவு திருப்திகரமா யிருக்க வில்லை. "பரதேசி உண்மையாய்க் கிறுக்கனாயிருக்கும் விஷயத்தில், அவன் நடத்தைகளையும், வார்த்தைகளையும் பார்த்துவிட்டு ஜமீன் தார் பரிகசித்துத்தானே செல்லவேண்டும்? அவர் மனம் ஏன் கவலைப்படவேண்டும்? அவர் முகத்தில் இயற்கையாயுள்ள குதூகல மெல்லாம் மறைந்து போயினவே!—என்ன மயமோ? தெரியவில்லை" என்று பலவாறு தர்க்கித்துச் சென்றனர்.

ஊர்கோலம் முடிந்தது. கடைசியாக ஜமீன்தாரின் வண்டி அரண்மனையின் முன் மண்டபத்தி (Portico) ல் வந்து நின்றது. எவ்வளவு சமாதானம் செய்துகொண்டாலும், அவரது அகத்துள்ள கவலையை முகம் தெரிவித்தது. யந்திரகதியால் நடத்தப் பட்ட உருவம்போல ஜமீன்தார் அவ்வண்டியினின்றும் எழுந்து இறங்க ஆரம்பித்தபோது, படி தவறிக் கால்வைக்கவே திடீரென்று கால் வழுவி முழங்கால் வளைந்து வாயிற் படியில் வீழ்ந்துவிட்டார். "ஹா! ஹா! ஹா!" என்ற சத்தம் எங்கும் பரவிற்று. மனக்கலக்கத்தால் தம் நினைவுதவறி விழுந்தவராயினும், ஏதோ தற்செயலாய்க் கால்வழுவி வீழ்ந்தவர்போல பாவனைசெய்துகொண்டு எழுந்து மற்ற காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தார். ஆங்குள்ளோர 'இதென்ன சகுனத்தடை?' என்று மனங்கலங்கினார்கள். ஒருவாறு அன்று பகலில் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்தேறின.

மாலை நாலு மணிக்குக் கொலுமண்டபத்தில், பிரபுக்களும், துரைமார்களும், உத்தியோகஸ்தர்களும், தங்கள் அந்தஸ்துக்குத் தக்க உடை தரித்து, வரிசையாய் அமர்ந்திருந்தார். அன்று அவ் வேளை நடக்கவேண்டிய விஷயங்களெல்லாம நடந்தபிறகு, கலெக்டர்

துரையவர்கள் பின்வருமாறு உபசாரமாய் ஜமீன்தாருக்கு வந்தன மளித்தார்.

"ஸ்ரீமதிகாள்! ஸ்ரீமான்காள்! இன்று மாலை இப்பெரும் ஸபையோர்களின் பிரதிநிதியாக எனது நண்பர், இம்மணிபுரம் மஹாராஜா அவர்களுக்கு உபசார வந்தன மளிக்கும் கௌரவம் எனக்கு ஏற்பட்டது என் பாக்கியமென்றே எண்ணுகின்றேன். ஸ்ரீமான்களே! கொஞ்சகாலமாவது நமது ஜமீன்தாரவர்களின் பழக்க முள்ளவர்கள், இம்மஹானுபாவனுடைய அன்பும், பெருந்தன்மையும் உத்தமகுணங்களும் கவனியாது இருக்கமாட்டார்கள். ராஜ பக்தியும், குடிகளிடத் திரக்கமும், தன் அந்தஸ்துக்குத் தக்க கௌரவ புத்தியும், உயர்ந்த கல்வியும், உயர்வகுப்பினர் ஸங்கமும் வாய்ந்த நமது நண்பர், இம்மதுரை ஜில்லாவுக்கே—ஏன், இச் சென்னை ராஜதானிக்கே—ஓர் திலகமாய் விளங்குகின்றார்.

இன்று காலை ஊர்கோலம் முடிந்ததும், நமது நண்பர் வண்டியினின்றும் தவறி விழுந்தவராயினும் யாதொரு காயமு மில்லாது தப்பினதைப்பற்றி நாம கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறோம்.

ஸ்ரீமான்களே! இன்னொரு ஸந்தோஷ ஸமாசாரம்! நமது நண்பர் இதுவரை விவாஹமில்லாமல் இருந்து—அடுத்த வெள்ளிக் கிழமை அவருக்கு விவாஹம் நடக்கப்போவதைக் கேட்க நாமெல்லோரும் ஸந்தோஷமடைகிறோம்.

ஸ்ரீமான்காள்! நமது நண்பரின உத்தமகுணங்களை, இந்நாட்டிலுள்ள இதர ஜமீன்தார்களும அனுஸரிக்குமாறு, நமது நண்பர் ஓர் உதாஹரணமாய் நீடூழிகாலம் எக்காலமும் ராஜபக்தியும், குடிகளிடத்தன்பும்வாய்ந்தவராய் ராஜ்யபரிபாலனம் செய்து வருவாராக!"

ஆங்குள்ளோர் யாவருக்கும், பூமாலைகள் பூச்செண்டுகள், சந்தனங்கள், தாம்பூலங்கள வழங்கப்பட்டன. கலெக்டர் முகமலர்ச்சியுடன், ஜமீன்தாருக்கும், ஆங்கு வந்திருந்த கனவான்களுக்கும் பரஸ்பரம் பரிசயப்படுத்திவைத்தார்.

இவ்வாறு கோலாகலமாய் நமது மணிபுரம் மஹாராஜாவின் மகுடாபிஷேக மஹோத்ஸவம் நடந்தது.

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---

# ஆறாவது அத்தியாயம்.

---

உலக வாழ்க்கையை ஓர் பெருங்கடலுக்கும், அவ்வாழ்க்கைக்குட்பட்ட மனிதனை யக்கடல் மீது செல்லும் கப்பலுக்கும் ஒப்பிடுவது வழக்கம். கடல் மீது புசலும் அமைதியும் மாறி மாறிக காணப்படுவதுபோல மனித வாழ்விலும் சுக துக்கங்கள் மாறி மாறியே தோன்றுகின்றன. திமிங்கலம் முதலான பயங்கரமான ஜல ஜந்துக்களும, பாறைகளும, சமுத்திரக் கொடிகளும் திடீரென்று தோன்றி கப்பல்களைத் தாக்குவதுபோல், மனிதர்களுக்கும் எதிர்பாராத விபத்துக்கள் நேரிடுகின்றன. கைதேர்ந்த மாலுமி போல் ஒவவொருவனும் தனது புத்தித் திறமையால், கூடியவரை தனக்குச் சம்பவிக்கும் கஷ்டங்களைத் தவிர்த்துக்கொண்டும், சுகமாயிருக்கும் நாட்களில் அஜாக்ரதையாய் இல்லாமலும், இனியவ்வாறு விபத்துக்கள் நேராமல் தன்னைப் பாதுகாத்துக்கொண்டும் தனது வாழ்நாளைக் கழிக்கின்றான். புத்தித் திறமையும் மனோ தைரியமுமற்றவனோ தற்செயலாய் நேரிடும் அவ்விபத்துக்களுககு இரையாகித் தன் வாழ்நாளெல்லாம் வீழ்நாளாகச் செய்துகொள்ளுகின்றான்.

நாம், முன் அத்தியாயங்களில் கூறிய விருத்தாந்தங்கள் நடந்ததற்கும், இனிக் கூறப்படும் விஷயங்கள நடத்தற்கும் உள்ள மத்திய காலத்தில், நமது மாதவனுடைய நிலைமையைப்பற்றி யொருவாறு விவரிப்போம். பாலூர் ஜமீன்தாரின் குடும்பத்துடன் தான் எவ்வளவோ அன்புடன் சிறுவயது முதல் கூடிவாழ்ந்தும், ஏதோ தெய்வகதியால், இவ்வாறு பிரியும்படி நேர்ந்துவிட்டது. இவ்வகண்ட உலகமும், இவனுக்கு இனிமேல் ஏற்படத்தக்க கதியும், இன்னவென்று தோன்றாமல், எங்கும் ஓர் அந்தகாரமாய் தோன்றின. சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்தவனாயினும்; பாலூர் ஜமீன்தாரின் பெருங்கருணையால், கஷ்டமென்பதே இன்னதென்று அறியாவண்ணம், தானும் ஓர் ஜமீன்தார் புதல்வன்போல், தினகரனுடன் அவ்வளவு செல்வமாய் வாழ்ந்து வந்தவன். அதிபாலியன். உலகமே தெரியாதவன். என் செய்வான்?

*"தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை யுலர்தர வாட்டுந்
தரித்திர மளவாச சோம்பலை யெழுப்புஞ் சாற்றரு மூலோபத்தை மிகுக்குந்
தரித்திரந் தலைவன் தலைவியர்க் கிடையே தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை தருமிதிற் கொடியதொன் றிலையே."

† கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது .. .. ..
அன்பிலார் கையினி லுண்பதுதானே.

வறுமையில் நேரிடும் கொடுமைகள் பலவாயினும், நல்லோர்கள் நல்வழி தவறாது தங்களைக் காத்துக்கொள்வார்கள்.

பௌதிக உலகில்(Physical world) ஆகர்ஷணம் (Attraction) விகர்ஷணம் (Repulsion) என இருவகைப்பட்ட சக்திகள் பிரபலிப்பது போல, மன உலகிலும், அச்சக்திகள் பிரபலிக்கின்றன. மனிதர்களுள் பரஸ்பரம ஏற்படும் ஆகர்ஷண சக்திக்கு 'அன்பு' என்றும், விகர்ஷண சக்திக்கு 'வெறுப்பு' என்றும் பெயர்.

மாதவனுக்கு இவ்வாறு துன்பங்கள் நேர்ந்தும், அவ்வரன் மனைவிட்டு விலகாது, அங்கேயே தங்குவதற்குப் போதுமான காரணம் யாது? அவனுள்ளத்தைக் கொள்ளைகொண்ட பொருள் யாது? அவன் ஹிருதய கமலத்தில் எப்பொழுதும் வசித்துவரும் மாது சிரோமணி மாலினியின் பிரதிபிம்பமே. உண்மையிலேயே அது, மாலினிக்கும் மாதவனுக்கும் பாலியத்தில் வேரூன்றி நாளடைவில் விருத்தியடைந்து, மலர்தரு மரம்போல, வளர்ந்திருக்கின்ற மெய்க்காதலே!. இவ்விருவர் ஹிருதயமும், அன்பெனுந் தளையால் பரஸ்பரம் பந்தப்பட்டு, பிரிவாற்றாது தவித்துக் கொண்டிருக்கின்றது. மாலினி, மாதவர்களின், ஸ்தூல சரீரங்கள் ஸந்திக்காமல் தடுக்கப்பட்டனவாயினும், அவர்கள் மனம் ஒன்றுபட்டு அன்பானது அதிகரித்துக்கொண்டே வந்தது.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A., B. L.

* குசேலோபாக்கியானம்.
† ஔவையார்.

# சமாசாரக்கொத்து.

---

**டேல்வி தர்பாரும் இராய் பகதூர் பெ. மா. மதுரைப்பிள்ளையவர்களும்:**—நமது மகாராஜ சக்கிரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் அவர்களின் முடிசூட்டு வைபவத்திற்கு இரங்கூன் கனதன வியாபாரியும், முனிசிபல் கமிஷனரும், ஆனரேரி மாஜிஸ்டிரேட்டுமாகிய இராய் பகதூர் பெ. மா. மதுரைப்பிள்ளையவர்களை, கவர்ன்மெண்டார் செலவிலேயே வரும்படி கேட்டிருந்த விஷயத்தை முன்னமே தெரிவித்துள்ளோம். அத்தகைய பேரானந்த வைபவத்திற்குப பிள்ளையவர்கள் சுகவீனத்தால் செல்ல முடியவில்லையென்ற அறிந்து மிகவும் விசனிக்கிறோம். இவர் பரிபூரண சௌக்கியமுற எல்லாம் வல்ல இறைவனது திருவருளைச் சிந்திக்கின்றோம்.

* * *

பெட்டைக்கோழிக்கு கொயினா என்ற மாத்திரையைக் கொடுத்தால் தினம் இரண்டு முட்டையிடக் கூடுமென்று பாஸ்ரன் என்ற ஓர் வைத்திய நிபுணர் கண்டு பிடித்திருக்கிறாராம்.

* * *

மண்ணெண்ணெயில் 2, 3, ஸ்பூன் எடுத்து பிளேக் வியாதியாயுள்ளவர்களுக்குக் கொடுத்தால் நலமாகும் என்று ஓர் பர்மியர் சொல்லுகிறார்.

* * *

பம்பாயைச் சேர்ந்த ரத்னகிரியில் புருஷோத்தம மஹாதேவ்பவத் என்ற காகித வியாபாரியானவன் திலகரின் உருவத்தைக காகிதத்தில் பதிப்பித்து கோட் புஸ்தகமாக விற்றானென்று குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கையில், நியாயாதிபதியானவர் ராஜத்துரோகம் விளைவிக்கக்கூடியதாயிருக்கிறதென்று ரூபாய் 75 அபராதம் விதித்தனராம்.

* * *

**மைசூரில் சீன நாணயங்கள்:**—மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சித்திர துர்க்கத்திலுள்ள சந்திராவள்ளி எனனும் பூமியைச சோதனை செய்த பொழுது முற்காலத்து வழங்கிய சீன நாணயங்கள் அகப்பட்டன. இதனால் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அதிக சம்பந்த மிருந்ததாக அறியலாம்

* * *

**ஐந்து அங்குல உயரமுள்ள குழந்தை:**—பர்மாவிலுள்ள மாபின் ஜில்லாவைச்சேர்ந்த எலக்கலே யென்னு மூரில் ஒரு பர்மிய ஸ்திரீ இற்றைக் காறுமாததிற்கு முன் 5-அங்குல உயரமும் 1½-அங்குல அகலமுமுள்ள ஒரு குழந்தை பெற்றாள். அக்குழந்தை உணங்கல் (உலர்ந்த மீன்) போன்றிருக்கின்றதாம்.

ஆறு மாதம் நித்திரை செய்தவன்:—பாரீஸ்பட்டணத்தில் "மோம்ப்பெல்லியே" ஆஸ்பத்திரியில் எமீல் கோத்ராங் என்ற கொடிமுந்திரிகைத் தோட்டக்காரன் ஒருவன் ஆறுமாதகாலமாய் நித்திரையிலிருந்து சென்றமீ 10உ சவுக்கியமாய் விழித்தெழுந்தான். அவனுடைய நீண்ட நித்திரையில் அவனுக்குத் தினந்தோறும் 5 பைண்ட் பால் குழாய் வழியாய் உள்ளுக்கு ஆகாரமாக இறக்கப் பட்டதாம். இது "நித்திரை ரோகம்" என்ற வியாதியல்லவென்றும், பிராஞ்சு தேசத்தில் அவ்வியாதி கிடையாதென்றும், அந்தத் தோட்டக்காரனுக்குச் சுபாவத்திலேயே தூக்கத்தைப்போன்ற ஓர் அசமந்தம் உண்டாயிருக்க வேண்டுமென்றும் வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

* * *

கத்தரிக்கப்பட்ட தலைமுடியை யுடையவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று கொச்சிராஜா ஒரு கட்டளை பிறப்பித்திருக்கிறார். நமது மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவிலில் பாதரக்ஷையைக் கையில் எடுத்துக்கொண்டும் உட்புகக்கூடாதென்று தேவஸ்தானத்தார் தீர்மானித்தது தமது தீர்மானத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர மகமதியர்களைக் காவற்காரராக நியமித்திருப்பதும் ஆலய அபிமானிகளுக்குச் சந்தோஷமும் திருப்தியும் விளைவிக்காமற் போகாது.

* * *

மிஸ்ஸிஸ் ஆஷுக்குப் பென்ஷன்:—மிஸ்டர் ஆஷை வாஞ்சி ஐயனென்ற இராஜத்துரோகி திடீரென்று துப்பாக்கியால் சுட்டுத் தானும் சுட்டுக்கொண்டு மாண்டுபோன விஷயம் யாவரும் அறிந்ததே. டை துரையவர்களின் பத்தினி மிஸ்ஸஸ் ஆஷுக்கு அந்த அம்மாள் கைம்பெண்ணாகவே இருக்கும் வரையில் வருஷத்தில் விசேஷப் பென்ஷனாக (140) நூற்றுநாற்பது பவுன் கொடுக்கப்படும் என்றும், குழந்தைகள் நாலுபேருக்கும் விசேஷப் பென்ஷனாக வருஷத்தில் தலைக்கு (21) இருபத்தொரு பவுன் கொடுக்கப்படுமென்றும் இந்தியா மந்திரி உத்தரவு செய்திருக்கிறார். இதுவன்றி சிவில் குடும்பம் பென்ஷன் நிதியிலிருந்தும் இவர்கள் பென்ஷன் பெறுவர்.

* * *

போபால் மகாராணி:—இங்கிலாந்தில் நமது சக்ரவர்த்தியாருக்கு மகுடாபிஷேகம் நடைபெற்ற தினத்தன்று இவர்க்கு ஜி. ஸி. ஐ. இ. பட்டம்கொடுபட்டது. ஸ்திரீகளில் இப்பட்டம் முதல் முதல் பெற்றவர் இவரே ஆவார்.

* * *

நூற்றாறு வயதுள்ள ஒரு ஸ்திரீ:—இங்கிலாந்தில் வசிக்கும் ஒரு ஸ்திரீ தனது 106-வது வயது தினத்தைக் கொண்டாடினாள். இவள் சோர்வில்லாமல் வேலை செய்கின்றனளாம்.

## சமாசாரக்கொத்து.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை:-24—8—11ல் திருப்புத்தூர் சப் மாஜிஸ்டிரேட் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸையரவர்கள் பி. ஏ. யின் அக்கிராசனத்தின் கீழ் கூடிய இம்மகா சபையில, வித்துவான்களாகிய மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரவர்கள் "புகழ்" என்பதையும், மதுரை மாணவர் செந் தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஸ்ரீ கோபாலகிருஷ்ணையரவர்கள் 'வாய்மை' என்பதையும், வலையபட்டி விநாயக வித்தியாசாலை உபாத்தியாயா ஸ்ரீ இராமசாமி ஐயங்காரவர்கள் "ஒழுக்கம்" என்பதையும், தெற்கூர் ஸ்ரீ கரு. முத்து. தியாகராஜ செட்டியாரவர்கள் "ஒற்றுமை" என்பதையும, மகிபாலன் பட்டி ஸ்ரீ மு. சின்னய செட்டியார் அவாகள, மேற்கூறிய எல்லா விஷயங்களையும் பற்றிக் கேட்பவர் மனக்குளிர உபந்நியசித்தார்கள். அக்கூட்டத்தில் ஸ்ரீ கோபாலகிருஷ்ணையரவர்கள் கூறிய "சங்க வாழ்த்து" அடுத்த பாநுவில் வெளி வரும்.

* * *

இங்கிலாந்தில் வாசிக்கும் இந்திய மாணவரின் தொகை:—இங்கிலாந்தில் இப்போது 128 இந்திய மாணவர்கள் வாசிக்கின்றார்கள். இவர்களுள் இந்துக்கள் 72, மகம்மதியர் 23, சீக் ஜாதியர் 33 பேர்கள்.

பத்திராதிபர்.

---


# அஞ்ஞாதவாசம்.

அல்லது,

## மாண்டவன் மீண்டமாயம்.

இஃதோரு அருமையான துப்பறியும் தமிழ் நாவல்.

இது மதுரை "வித்தியாபாநு"ப் பத்திரிகையில்,

"கல்யாணி" என்னும் இனிய செந்தமிழ் நாவல் எழுதியவரும்

"மாலினீமாதவம்" என்ற நாவலை எழுதிவருவோருமான.

ஸ்ரீ R. S. நாராயணசாமிஐயர் அவர்கள் B. A. B. L.

இயற்றியது

விலை அணு 8.

வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

வேண்டுவோர் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம :—

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

ம. கோபாலகிருஷ்ணையர்.

"வித்தியாபாநு"ப் பத்திராதிபர், மதுரை.

ADVERTISEMENT.

# பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம்.

**ஸ்ரீ காசி.**

பட்டு பீதாம்பரக் காட்லாக் இனுமாக அனுப்பப்படும்.

## உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணு முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணு 10முதல ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் | அகலம் | 1-க்கு | ரூ | முழம் | அகலம் | 1-க்கு | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2½ | 6 முதல 8 | | 7 | 3 | 10 முதல் 13 | |
| 5 | 3 | 7 | 9 | 8 | 3 | 12 | 15 |
| 6 | 2¾ | 8 | 9 | 9 | 3 | 14 | 16 |
| 6 | 3 | 9 | 13 | 10 | 3 | 15 | 18 |

தபால் சார்ஜ் பிரதுதியேகம்

## பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமததால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறத்திலும தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரதகியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

## குழந்தைகள்!

குழந்தைகள்விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்,

விலாசம்: மானேஜர்,

# பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, **Benares City.**